தினமலர்
சென்னை
● திங்கள் ● ஏப்ரல் 8 2019

# ஐசோடோப் புற்றுநோய் சிகிச்சைக்கு அனுமதி

சென்னை, ஏப். 8–

ராமச்சந்திரா மருத்துவமனையில், ஐசோடோப் புற்றுநோய் சிகிச்சைக்கு, அணுசக்தி வாரியம் அனுமதி வழங்கி உள்ளது.

இது குறித்து, ராமச்சந்திரா மருத்துவமனை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புற்றுநோய் சிகிச்சையில், ஐசோடோப்புகள் மிகுந்த அளவு கதிரியக்கம் கொண்டதால், புற்றுநோய் திசுக்களை அழிக்கும். இதை கையாள்பவர்களுக்கு பிரச்னை ஏற்படுவதால், பாதுகாப்பை உறுதி செய்து, இந்திய அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம் அனுமதி வழங்குகிறது.

அதன்படி, சென்னை, போரூர், ராமச்சந்திரா மருத்துவமனையில், உயர் அளவு ஐசோடோப் புற்றுநோய் சிகிச்சைக்கான நவீன வசதிக்கு, அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம் அனுமதி வழங்கி உள்ளது. இதன் வாயிலாக, தைராய்டு, நியூரோ என்டோக்ரைன் புற்றுநோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும்.

ராமச்சந்திராவில், அணுசக்தி மற்றும் பெட்சிடி ஸ்கேன் பரிசோதனைகளும், மருத்துவ அறுவை சிகிச்சை மற்றும் கதிரியக்க சிகிச்சைகளும், ஒரே இடத்தில் கிடைக்கின்றன.

இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.